செ.வெ.எண்: 23 நாள்:19.06.2020

## அரியலூர் மாவட்டம்

## 119 கட்டுமான தொழிலாளர்களுக்கு ரூ.2 இலட்சத்து 38 ஆயிரம் மதிப்பில் பாதுகாப்பு உபகரணங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் விழாவில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் 119 கட்டுமான தொழிலாளர்களுக்கு கட்டுமான உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (19.06.2020) வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தொழிலாளர் நல வாரியத்தில் உள்ள கட்டுமானம், உழைப்பு மற்றும் ஆட்டோ தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் கட்டுமானம், உழைப்பு மற்றும் ஆட்டோ தொழிலாளர் நல வாரியத்தில் 45,006 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். கொரோனா வைரஸ் பரவலை தடுப்பு நடவடிக்கையினையொட்டி தமிழகத்தில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு காலங்களில் தொழிலாளர்களுக்கு உணவு தொகுப்பு மற்றும் ரூ.2000/- வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்படி, பதிவு செய்துள்ள 10,916 கட்டுமான தொழிலாளர்களுக்கு தலா ரூ.2000/- வீதமும், 12,042 கட்டுமான தொழிலாளர்களுக்கு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் அடங்கிய உணவு தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 383 ஆட்டோ தொழிலாளர்களுக்கு ரூ.2000/- வீதமும், 396 ஆட்டோ தொழிலாளர்களுக்கு உணவு தொகுப்புகளும் வழங்கப்பட்டுள்ளது. 9070 உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கு தலா ரூ.2000/- வீதமும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கட்டுமான தொழிலாளர்கள் பாதுகாப்பாக தொழில் செய்வதற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும் என 110 விதியின்கீழ் அறிவித்தார்கள். அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் ரூ.2000/- மதிப்பில் தலைகவசம், கையுறை, கண்கண்ணாடி, காலனி, பாதுகாப்பு உடை ஆகியவைகள் அடங்கிய பெட்டகங்கள் 119 தொழிலாளர்களுக்கு ரூ.2 இலட்சத்து 38 ஆயிரம் மதிப்பில் இன்று வழங்கப்படுகிறது. இதை பயன்படுத்தி கட்டுமான தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணி செய்யவும். மேலும், நல வாரியங்களில் பதிவு செய்யாத தொழிலாளர்கள் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலத்தை தங்கள் பெயர்களை பதிவு செய்துக்கொண்டு பயனடையவும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, தொழிலாளர் உதவி ஆணையர் முகமது யூசப், கண்காணிப்பாளர் ஜ.நூருல்லா, உதவி கணக்கு அலுவலர் அன்புகரசன் மற்றும் அலுவலர்கள், தொழிலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**